TC-135

070/DD/18

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS
# TAMIL NADU MARITIME BOARD TEST – HIGHER GRADE

(With Books)

Maximum Time : 2.30 hours | Maximum Marks : 100

## *IMPORTANT INSTRUCTIONS*

## DESCRIPTIVE TYPE
விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

1. Answers in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.

   விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. Answer should be in brief and to the point and need not be a verbatim reproduction of printed pages. (Applicable for tests to be answered "with books" only).

   விடைகள் சுருக்கமாகவும், வினாவிற்கு உரிய அளவிலும் இருக்க வேண்டும். புத்தகத்தில் உள்ளவற்றை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை திரும்ப எழுதக் கூடாது. (இக்குறிப்பு புத்தகங்களுடன் எழுதும் தேர்விற்கு மட்டும் பொருந்தும்)

3. In case of doubt, English version is the final.

   வினாக்களில் சந்தேகமிருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

[Turn over

**Answer any six questions each carry 4 marks.** **(6 × 4 = 24)**

ஏதேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்க ஒவ்வொன்றிற்கும் 4 மதிப்பெண்கள்.

1. Define "Crude Oil", under Merchant Shipping Act 1958.
வணிகக் கப்பல் சட்டம் 1958ன் படி "கச்சா எண்ணெய்" - வரையறு.

2. Can Tamil Nadu Maritime Board form a State Port Consultative Committee, if so, who are all can be represented.
தமிழ்நாடு கடல்சார் வாரியம் ஒரு மாநில துறைமுக ஆலோசனைக் குழு அமைக்கலாமா? அவ்வாறெனில், யார் எல்லாம் பிரதிநிதித்துவம் பெற முடியும்?

3. What are the documents needed for registration of Harbour Craft for the first time?
துறைமுக மரக்கலனை முதல் தடவையாகப் பதிவு செய்வதற்கு தேவையான ஆவணங்கள் யாவை?

4. Mention the specifications of Shoulder Badge of Port Conservator.
துறைமுகப் பாதுகாப்பாளரின் தோள்பட்டையில் அணியும் அடையாளத்தின் சிறப்பம்சங்களைக் குறிப்பிடுக.

5. A Pilot disobeys in a minor port - Mention the actions which can be taken against the Pilot.
ஒரு சிறுதுறைமுகத்தில் ஒரு வழிகாட்டி கீழ்ப்படியவில்லை - அவ்வழிகாட்டிக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகளை குறிப்பிடுக.

6. Why do they levy light-dues in India? Who has to pay the dues?
இந்தியாவில் கலங்கரை விளக்கத் தீர்வை ஏன் விதிக்கிறார்கள்? தீர்வைக் கட்டணத்தை யார் செலுத்துவார்கள்?

7. What is meaning of the Quarantine Message MEPUP and MEJAC?
தொற்றுநோய் ஒதுக்கிட தகவலில் MEPUP மற்றும் MEJAC என்பதன் பொருள் என்ன?

8. Draw the Starboard hand Lateral Marks in System "A".
கப்பலின் வலப்புறப் பகுதியின் பக்கவாட்டு குறியிட்டில் முறை "A" வரைக.

**Answer any six questions each carry 6 marks :** **(6 × 6 = 36)**

ஏதேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்க ஒவ்வொன்றிற்கும் 6 மதிப்பெண்கள் :

9. Define the following in Security view as per Merchant Shipping Act 1958.
(a) Company
(b) Port Facility.

வணிகக் கப்பல் சட்டம் 1958ன் படி, பாதுகாப்பு கொள்கையில் கீழ்க்காண்பனவற்றை வரையறு
(அ) நிறுவனம்
(ஆ) துறைமுக வசதி.

10. A distraint Vessel Master is refusing to pay charges and rates to Tamil Nadu Maritime Board - Explain the actions.
ஒரு கைப்பற்றப்பட்ட கப்பலின் மாலுமி, தமிழ்நாடு கடல்சார் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய கட்டணங்களை செலுத்த மறுப்பது - நடவடிக்கைகளை விளக்குக.

11. What is a Contingent Register in Tamil Nadu Maritime Board?
தமிழ்நாடு கடல்சார் வாரியத்தில் நடப்பு பதிவேடு என்றால் என்ன?

12. Under what circumstances, a Port Conservator in a minor port will not grant Port Clearance.
ஒரு சிறுதுறைமுகத்தின் ஒரு துறைமுகப் பாதுகாப்பாளர் எந்த சூழ்நிலையில், துறைமுக வெளியேறு சான்று அளிப்பதில்லை.

13. Nagapattinam Port Officer, intends to construct a Port Control Building and erect a High Mast Light near the Light House — Is there any restrictions — Explain.
நாகப்பட்டினம் துறைமுக அலுவலர், ஒரு துறைமுக கட்டுப்பாட்டு கட்டிடத்தை கட்ட உத்தேசிருப்பதாகவும் மற்றும் கலங்கரை விளக்கத்திற்கு அருகில் ஒரு உயர் கம்ப விளக்கினை நிறுவுவதற்கும் முயற்சிக்கிறார் - இதற்கு ஏதேனும் கட்டுப்பாடுகள் உள்ளனவா? விளக்குக.

14. A Ship calling Kattupalli Port has on board a person with typhus. What are the actions taken by the Health Officer before granting pratique.
ஒரு கப்பல் காட்டுப்பள்ளி துறைமுகத்தை அழைத்த போது, அதில் ஒரு நபர் டைப்பஸ் (typhus) என்ற வியாதியால் பாதிக்கப்பட்டுள்ளார். தொற்று நீக்கச் சீட்டு வழங்குவதற்கு முன்னர், சுகாதார அதிகாரியால் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை?

15. Write the specifications of Night Signals in the Storm warning System.
புயல் எச்சரிக்கை அமைப்பில் இரவு சமிக்ஞைகளுக்கான சிறப்பம்சங்கள் யாவை?

**Answer any FOUR questions each carry 10 marks : (4 × 10 = 40)**

**ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்க ஒவ்வொன்றிற்கும் 10 மதிப்பெண்கள் :**

16. M.T. SWARNA SWARAJYA, Gross Registered Tonnage 37750, arrived PY —03 Oil field on 08.09.2017 and loaded 47500 Metric Tonnes of Crude Oil. The vessel sailed from PY 03 Oil field on 10.09.2017 to Chennai Port. It reached Chennai Port on 11.09.2017 and berthed on arrival. It discharged 36200 Metric Tonnes of Crude Oil and sailed to Nagapattinam CPCL Jetty on 13.09.2017. The vessel arrived Nagapattinam anchorage on 14.09.2017. Due to berthing delay, the vessel was berthed on 19.10.2017 and unloaded the balance cargo. After discharging the Cargo, the vessel sailed to Paradip Port.

Calculate the revenue to Tamil Nadu Maritime Board from the above details.

பதிவு செய்யப்பட்ட மொத்த எடை 37750 கொண்ட எம்.டி. சொர்ண சுவராஜ்யா கப்பல் 08.09.2017 அன்று பி.ஓய்-.03 எண்ணெய் வளப்பகுதியை வந்தடைந்து, 47500 மெட்ரிக் டன் கச்சா எண்ணெய் ஏற்றப்பட்டது. அந்தக் கப்பல் பி.ஓய்-03 எண்ணெய் வளப்பகுதியில் இருந்து 10.09.2017 அன்று சென்னை துறைமுகத்திற்கு புறப்பட்டது. அக்கப்பல் 11.09.2017 அன்று சென்னை துறைமுகத்தை வந்தடைந்து அன்றே தோணித் துறையில் அணைந்தது. 36200 மெட்ரிக் டன் கச்சா எண்ணெய் இறக்கப்பட்டு, 13.09.2017 அன்று நாகப்பட்டினம் சி.பி.சி.எல் தோணித் துறைக்கு புறப்பட்டது. அக்கப்பல் 14.09.2017 அன்று நாகப்பட்டினம் வந்தடைந்து நங்கூரமிட்டது. கப்பல் அணைய தாமதமானதால், அக்கப்பல் 19.10.2017 அணைந்தது மற்றும் மீதமுள்ள இருப்பு சரக்குகளை இறக்கியது. சரக்குகளை இறக்கிய பின், அக்கப்பல் பாரதீப் துறைமுகத்திற்குப் புறப்பட்டது.

மேற்கூறிய விவரங்களிலிருந்து தமிழ்நாடு கடல்சார் வாரியத்திற்கான வருவாயினைக் கணக்கிடுக.

17. A Company developed a Captive Port by Constructing a trestle jetty with cargo handling equipments at a Project Cost of Rs. 95 Crores. Port limits were notified with a waterfront of 1.2 kilometres. Necessary license agreements were executed with Tamil Nadu Maritime Board. After obtaining statutory clearances, the terminal handled its first vessel with GRT 7650 at a draft of 8.5 meters and unloaded 9350 metric tonnes of Vinyl Chloride Monomer.

Calculate the revenue to Tamil Nadu Maritime Board from the above details.

ஒரு நிறுவனம் அணுகு தோணித் துறையை ரூ. 95 கோடி திட்ட செலவில் சரக்குகளைக் கையாளும் உபகரணங்களுடன் கட்டமைத்து, ஒரு தனியார் முதலீட்டுத் துறைமுகத்தை உருவாக்கியது. துறைமுக எல்லைகள் வரையறுக்கப்பட்டு 1.2 கிலோ மீட்டர் நீள கடற்கரை பகுதி வழங்கப்பட்டது. தமிழ்நாடு கடல்சார் வாரியத்துடன் தேவையான உரிம ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டன. சட்டப்பூர்வ அனுமதிகளைப் பெற்ற பிறகு அத்தோணித் துறையில் பதிவு செய்யப்பட்ட மொத்த எடை 7650 உடன் 8.5 மீட்டர் அழம் கொண்ட முதல் கப்பலில் இருந்து 9350 மெட்ரிக் டன் வினைல் குளோரைடு மோனோமர் இறக்கப்பட்டது.

மேற்கூறிய விவரங்களிலிருந்து தமிழ்நாடு கடல்சார் வாரியத்திற்கான வருவாயினைக் கணக்கிடுக.

18. What is methodology adopted in the collection of dues by Tamil Nadu Maritime Board for the commercial cargoes handled in the captive/commercial ports.

தமிழ்நாடு கடல்சார் வாரியத்தால், தனியார் முதலீட்டு / வணிகத் துறைமுகங்களில் கையாளப்பட்ட வர்த்தக சரக்குகளுக்கான கட்டணத் தீர்வையினை செலுத்துவதில் எந்த முறைப் பின்பற்றப்படுகிறது?

19. Mention the Procedures to be followed by Port Authorities regarding issue of Notices to Mariners.

மாலுமிகளுக்கு வழங்கப்படும் அறிவிப்புகள் தொடர்பாக, துறைமுக அதிகாரிகளால் பின்பற்றப்படும் நடைமுறைகளைக் குறிப்பிடுக.

20. What is the owner's liability in case of oil pollution as per Merchant Shipping Act 1958?

வணிகக் கப்பல் சட்டம் 1958ன் படி, எண்ணெய் மாசுபாட்டின் போது உரிமையாளின் பொறுப்பு என்ன?

---